# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரம்பேவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ரம்பேவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா.943,000 பெறுமதியான இயந்திரம் தொடர்பாக வருடாந்தம் 5% பெறுமானத்தேய்வு இடப்படவேண்டிய போதிலும் 20% தேய்விடப்பட்டமையினால் ஆண்டிற்கான இயந்திர பெறுமானத்தேய்வு ரூபா.141,450 ஆல் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | சொத்துக்கள் உரிய முறையில் அடையாளம் காணப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வீதி நிர்மாணம் ரூபா.798,478 ஆல் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கு முற்பட்ட வருடங்களில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத 15 செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா.19,236,991 சொத்துக்கள் மற்றும் பெறுப்புக்கள் கூற்றில் வழங்குநர்களாக காட்டப்பட்டுள்ளது. | வழங்குநர் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | நடைமுறைப்படுத்தப்படாத செயற்திட்டங்கள் வழங்குநர்களாக அடையாளப்படுத்தக் கூடாது. |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா.16,716 ஆல் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2019 ஆம் ஆண்டிற்கான அட்டுறு முத்திரை வரி வருமானம் ரூபா.1,115,000 ஆல் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதிப்பேரேட்டுக் கணக்கிற்கு அமைவாக ஆரம்ப மீதி ரூபா. 28,805,041 காணப்பட்டது இருப்பினும், தேய்மான ஏற்பாட்டுக்கான ஆவணத்தின் படி குறித்த ஆரம்ப மீதி ரூபா.73,400 காணப்பட்டது. ஆகவே ரூபா.28,878,441 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். | பட்டியல்கள் தொடர்புடைய பதிவேடுகளுடன் இணக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பட்டியல்களின்படி மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா.23,128,026 ஆக காணப்பட்ட போதிலும் காசுப்பாச்சல் கூற்றின்படி ரூபா.37,799,021 ஆகக் காணப்பட்டது ஆகவே ரூபா. 14,670,994 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா.435,841 பெறுமதியான 07 கணக்குகள் தொடர்பான மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான விரிவான பட்டியல்கள், வயது பகுப்பாய்வு மற்றும் மீதியை உறுதிப்படுத்தல் கடிதம் என்பன சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | உறுதிப்படுத்தல்கள் சமர்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி 571(2) | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட பொது வைப்புத் தொகை ரூபா. 86,465 அரசாங்க வருமானத்திற்கு மாற்றப்படாதுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றேன். | நிதி ஒழுங்கு விதிக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 15,326,002 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 25,728,099 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலங்கள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரியும் வரியும் | 2,267,502 | 2,564,612 | 1,566,997 | 3,248,989 | 2,317,318 | 2,583,652 | 1,571,734 | 2,251,374 |
| (ii) | வாடகை | 11,780,000 | 4,877,120 | 4,257,224 | 5,299,249 | 10,452,375 | 5,747,141 | 3,967,749 | 4,679,353 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 1,788,620 | 1,464,010 | 1,098,880 | 1,101,130 | 1,564,820 | 1,437,520 | 1,624,700 | 736,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 7,540,080 | 2,162,575 | 4,996,473 | 637,578 | 30,097,128 | 17,172,600 | 22,107,575 | 3,471,476 |
| | **மொத்தம்** | **23,376,202** | **11,068,317** | **11,919,574** | **10,286,946** | **44,431,641** | **26,940,913** | **29,271,758** | **11,138,203** |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ் வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | 2013 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரிகள் மற்றும் வரிகள் சேகரிக்கரிக்கப்படுகின்றன மற்றும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிலுவைகள் ரூபா.1,368,046 ஆகும். | நிலுவையாக உள்ள வீதவரிகள் மற்றும் வரிகள் சேகரிக்கரிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவையாக உள்ள வீதவரிகள் மற்றும் வரிகள் சேகரிக்கரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |
| (ii) | ரூபா.2,032,890 வர்த்தக வரி வருமானம் 2022 திசெம்பர் 31 இற்குள் சேகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். | ரூபா. 150,000 சேகரிக்கப்பட்டுள்ளது மிகுதி சேகரிக்கப்படவுள்ளது. | சேகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை தொழிற் துறை வரி ரூபா.325,300 மற்றும் வர்த்தக ரூபா.1,728,570 சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 இல் சேகரிக்கரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பற்றிசீட்டிற்கான உறுதிப்படுத்தல்கள் சமர்பிக்கப்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 31 நிலவரப்படி குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக ரூபா.572,416 அறவிடப்பட வேண்டியுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ii) | 2019 இல் இருந்து நிலுவையாகவுள்ள வாகன குத்தகை வாடகை ரூபா.2,992,145 மீளாய்வாண்டு வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2020 மற்றும் 2022 ஆண்டுகளுடன் தொடர்புடைய நிலுவை ரூபா.222,100 இனை அறவிடுவதற்கான ஏற்பாடுகள். மேற்கொள்ளப்பட்டுள்ளது இருப்பினும் 2019 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்திற்கான நிலுவையாகவுள்ள ரூபா.2,060,525 இனை அறவிடுவதற்கு குறிப்பிட்ட நபர்களை அடையாளம் காணமுடியாதுள்ளது. | அறவிடப்படாமைக்கான காரணங்களை கண்டறிந்து பொறுப்புவாய்ந்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | 2020 ஆண்டிற்கா றம்பேவ சத்திபொல குத்தகை தொடர்பான நிலுவையாளவுள்ள குத்தகை ரூபா.172,500 மற்றும் 2021 ஆண்டிற்கா றம்பேவ சத்திபொல குத்தகை தொடர்பான நிலுவையாளவுள்ள குத்தகை ரூபா.556,000 இனையும் அறவிடுவதற்குகாண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவைவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா.1,728,570 ஆகும். | ஏற்றுக்கொள்கின்றேன். | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| | 2022 திசெம்பர் 31 இல் மாகாணசபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.758,162 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.1,753,700 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்படுத்தப்படாத திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 04 திட்டங்களுக்காக ரூபா.1,730,000 ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தது, இருப்பினும் குறித்த திட்டங்கள் 2022 நவம்பர் 03 வரை நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை மற்றும் குறித்த நிதி சுமார் 05 ஆண்டுகளாக தொழிற்கணக்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. | குறித்த நிதி வேறு திட்டத்திற்கு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | குறித்த நிதி பொருத்தமான திட்டத்திற்கு உடனடியாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சண்டமல்கம கழிவு முகாமைத்துவ நிலையம் 2015 இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அதற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணியின் உரிமை சபையினால் பெறப்பட்டதன் பின்னர் கழிவு முகாமைத்துவ நிலையம் தொடங்கப்பட்டது மேலும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவு முகாமைத்துவ நிலையத்தில் ரூபா.7,744,000 பெறுமதியான இயந்திரம் மற்றும் உபகரணங்களும், ரூபா.5,355,739 பெறுமதியான கட்டடங்களும் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் போதுமான சேதனைப்பசளை உற்பத்தி மற்றும் மீள் சுழற்ச்சி பொருட்கள் விற்பனை ஆகியன இடம்பெற்றிருக்கவில்லை. | 2021 உடன் ஒப்பிடும்போது 2022 சேதனைப்பசளை விற்பனை அதிகரித்துள்ளது. | கழிவு முகாமைத்துவ நிலையமானது முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்டு உச்ச பயன்பாட்டில் பராமரிக்கப்பட வேண்டும் |

### 3.4 விளைவற்ற மற்றும் குறை பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1994 ஆம் ஆண்டில் ரூபா.57,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டதும் முழுமையாக தேய்விடப்பட்ட சபைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிலானது 2022 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது. | ஏலம் இடுவதற்க்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஏலம் இடுவதற்க்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையின் பழைய நூலக கட்டடம் திருத்த வேலைகள் 2017 திசெம்பர் 25 இல் முடிவடைந்ததாக கருதப்பட்டு ரூபா.2,917,338 தொகை செலவிடப்பட்டிருந்தது இருப்பினும் கட்டடம் வேலைகள் பயன்படுத்தக்கூடிய நிலையில் வேலைகள் முடிக்கப்படாமையினால் குறித்த கட்டடம் பயன்படுத்தப்படாதுள்ளது. | பொறியளரலரின் வழிகாட்டல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது மேலும் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதன் பின்னர் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. | கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் கட்டடத்தினை பயன்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி திணைக்களத்தனால் 2021 ஆம் ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்ட ரூபா..710,000 பெறுமதியான கழிவகற்றும் இயந்திரம் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது. | இது ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | இது ஆகக்கூடிய வினைத்திறன் மட்டத்தில் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 04 கடைகளுக்கான விலைமனுக்கள் திறக்கப்பட்ட நிலையில் பெறுகைக்குழு உறுப்பினர்கள் கூறுவிலையில் மாற்றம் செய்ய முற்பட்டதன் காரணமாக உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் விலைமனு வழங்கல் இடை நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக சரியாக விலைமனு சமர்பித்தவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதுடன் சபைக்கு குறைந்தபட்ச ஏல விலையின் அடிப்படையில் மாதமொன்றுக்கு ரூபா..94,500 வருமானம் இழக்கப்பட்டுள்ளது. | உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் விலைமனு வழங்கல் இடை நிறுத்தப்பட்டது மேலும் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். | குறித்த கடையினை வாடகைக்கு விடமுடியாத காரணத்தால் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தினை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 2019 மே 16 ஆம் திகதியில் விபத்திற்குள்ளான கப் வாகனம் தொடர்பாக சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.94,405 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா.94,405 மட்டுமே சாரதியிடமிருந்து அறவிட வேண்டியுள்ளது. | அறவிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |